மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்போது 75 மார்க் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதை 150 ஆக உயர்த்தினல், அதனுல் நல்ல பலன் கிடைக்குமானுல் அதைப்பற்றி பரிசீலனை செய்யலாம்.

திரு. இ. எஸ். தியாகராஜன்: தலைவரவர்களே, இந்த ஆண்டு பயிற்சிப் பள்ளிகள் சிலவற்றை மூடப்போவதாகச் சொல்லப்படுகிறது. அவை யாவை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இரண்டு ஆண்டு காலத்திற்கு எவ்வளவு ஆசிரியர்கள் தேவையோ அந்த அளவுக்கு ஆசிரியர் பயிற்சி அளிப்பது என்றும், அதற்குத் தகுந்த முறையில் செக்ஷன்களை குறைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே ஆங்காங்கே இருக்கின்ற வசதிகளையும் வாய்ப்புகளையும் பொறுத்து அதற்கேற்ப செக்ஷன்கள் குறைக்கப்படும். எங்கெங்கே குறைக்கப்படும் என்பதற்கு தனிக் கேள்வி போடவும்.

தமிழ் வளர்ச்சிக்கு தனி அதிகாரிகள்

* 648 வின—திரு. என் கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

மாவட்டந்தோறும் தமிழ் வளர்ச்சி அதிகாரிகளை நியமிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆம்.

வட ஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஒருவர் வீதமும் (சென்னை நகரம்—செங்கற்பட்டு மாவட்டம்), திருநெல்வேலி—கன்னியாகுமரி மாவட்டங்கள்), (கோயம்புத்தூர்-நீலகிரி மாவட்டங்கள்), (சேலம்—தர்மபுரி மாவட்டங்கள்) ஆகிய இரண்டு, இரண்டு மாவட்டங்களுக்கு ஒரு அலுவலர் வீதமும், தற்போது உள்ள ஆய்வுத் தனி அலுவலர் ஒருவரையும் சேர்த்து 10 ஆய்வு தனி அலுவலர்கள் நியமிக்க அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, தமிழ் வளர்ச்சி அதிகாரிகளை நியமிப்பதற்கு, சிறந்த தமிழ் ஆசிரியர்களையும், தமிழை நன்கு கற்றுத் தேறியவர்களையும், தமிழ்ப் பத்திரிகைத் துறையில் நல்ல அனுபவம் பெற்றவர்களையும் தேர்ந்தெடுப்பதில் அரசு சலுகை வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அவர்கள் அரசாங்கத் துறையில் 5 ஆண்டு காலம் பழக்கப்பட்டிருக்க வேண்டும். நல்ல தமிழ் அறிவு பெற்றவர்களாக இருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்களை அரசின் எல்லாத் துறைகளிலிருந்தும் தேர்ந்

தெடுக்க ஒரு குழு அமைக்கப்பட்டு, அதன் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அந்த முறையில் இந்த ஆண்டு 10 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். இது தவிர, மாவட்டந்தோறும் தமிழில் திறமை பெற்றவர்களுக்கு அவர்களின் தமிழ் ஆர்வத்தை ஊக்குவிக்கும் பொருட்டு இரண்டு பரிசுகள் சென்ற இரண்டு மூன்று ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகின்றன.

தனியார் பள்ளிகள்

*649 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

1971-ம் ஆண்டு எத்தனை, எந்தெந்த தனியார் பள்ளிகளை அரசு ஏற்று நடத்தும் செயற்குறிப்புள்ளது—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கீழ்க்கண்ட 3 உதவி பெறும் பள்ளிகளின் நிர்வாகத்தினர் தங்கள் உயர்நிலைப்பள்ளிகளை அரசு ஏற்று நடத்தும்படி கேட்டுள்ளனர்:—

1. இந்து உயர்நிலைப்பள்ளி, காளாம்பட்டி, நெல்லை மாவட்டம்.
2. கன்யா குருகுலம் வாசுகி பெண்கள் உயர்நிலைப்பள்ளி, திருவொற்றியூர், செங்கை மாவட்டம்.
3. பாரதி நாராயணசுவாமி உயர்நிலைப்பள்ளி, சில்லமரத்துப்பட்டி மதுரை மாவட்டம்.

இக் கோரிக்கைகள் பரிசீலனையில் உள்ளன.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே. அரசு ஏற்று நடத்த இருக்கின்ற பள்ளிகளில், காளாம்பட்டி பள்ளியை இந்த ஆண்டே எடுத்து நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே நிர்வாகத்தினர் அரசைக் கேட்டிருக்கிறார்கள். அரசு அதுபற்றிய விபரங்களை தெரிவிக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குனரைக் கேட்டிருக்கிறது. அவர்கள் மாவட்ட தலைமை கல்வி அதிகாரியைக் கேட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டுக்குள்ளேயே முழு விபரமும் தெரிந்துவிட்டால், இந்த ஆண்டே ஏற்று நடத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

மெக்காவாய் உயர்நிலை ஆரம்பப்பள்ளி

* 650 வினா—திரு. எம் முத்தையா : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ஒட்டப்பிடாரம் மெக்காவாய் உயர் நிலை ஆரம்பப்பள்ளி நிர்வாகியால் நடத்தப்பட்டு வரும் ஹாஸ்டலில் உணவு,உடை விஷயமாக ஊழல் என்று மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சமீபத்தில் தணிக்கை செய்தாரா ?